புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

# மதுரைக்காஞ்சி மற்றும் கலித்தொகை பாடலில் இடம்பெறும் நிறங்கள்

**ஆய்வாளர்**
***செ. சரவணப்பெருமாள்***
*உதவிப்பேராசிரியர்*
*தமிழியல் துறை*
*தொலைநெறி தொடர்கல்வி இயக்ககம் (பி.எட்)*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்*
*திருநெல்வேலி – 627012.*

**ஆய்வுச்சுருக்கம்**

*பரந்த உலகில் இயற்கையில் காணப்படுகின்ற அனைத்தும் ஏதாவது ஒரு நிறத்தில்தான் இருக்கின்றன. ஆதவன் உதிக்கும் போது ஒரு நிறத்திலும் மறையும் போது வேறொரு நிறத்திலும் காணப்படுகின்றன. இறைவனின் தோற்றம் தீப்பிழம்பாக வெளிப்படுகின்ற போது ஒரு நிறத்திலும் வடலூரில் வள்ளலார் இருந்து சோதியாக இருந்து மக்களுக்கு காட்சி கொடுக்கும் போது ஒரு நிறத்திலும் காணப்படுகின்றன. திருமாலினைக் குறிக்கும் போது கார்மேக வண்ணா என்று கடலின் நிறத்தை ஒப்பிடுகின்றனர். திருமாலின் பாதத்தினை தாமரை மலரின் நிறத்தை உடைய பாதம் என்று கூறுகின்றன. பெண்கள் அணியக்கூடிய அணிகலன்கள், மலர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறத்தில் காட்சியளிக்கின்றன. பறவைகள், விலங்குகள், பூச்சிகள் போன்றவை மற்றுமல்லாமல் தாவரங்களின் பூக்கள் ஒரு நிறம், காய்கள் ஒரு நிறம், கனிகள் ஒரு நிறம் என்றும், மனிதர்களில் பெண்களைக் குறிக்கும் போது மாந்தளிர் போன்ற மேனி என்றும் மாநிறம் என்றும் கருப்பு நிறம் என்றும் நிறத்தினை பாகுபடுத்தி சொல்கின்றன. அந்த நிறத்தினைப் பற்றி சங்க இலக்கியங்களில் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.*

முன்னுரை:

பாரதநாட்டில் பழமை வாய்ந்த மொழி தமிழ்மொழியாகும். இந்த தமிழ்மொழியைக் கொண்டு பல இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் பழமை வாய்ந்த இலக்கியங்கள் சங்க இலக்கியமாகும். அந்த சங்க இலக்கியங்களில் எண்ணற்ற சிறப்புக்கள் பொதிந்து கிடைக்கின்றன. அதன் அடிப்படையில் சங்க இலக்கியமாகிய மதுரைகாஞ்சி என்ற இலக்கிய பாடல்களில் "நிறம்" பற்றி பல செய்திகள் இடபெறுகின்றன அவற்றை இங்கு காண்போம்

ஆய்வு நோக்கம் ;

சங்க இலக்கியங்களில் பல பொருண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. அந்தப் பொருண்மையைக் கொண்டு பல ஆய்வுகள் செய்துள்ளனர். அதன் அடிப்படையில் நான் மதுரைக்காஞ்சி மற்றும் கலித்தொகைப் பாடலில் இடம் பெறும் நிறங்கள் என்ற பொருண்மையில் ஆய்வினை மேற்கொண்டுள்ளேன்.

ஆற்று வெள்ளம்;

களிறு மாய்க்கும் கதிர்க் கழனி
ஒளிறு இலஞ்சி அடை சிவந்த
முட்தாள சுடர்த்தாமரை
கள் கமழும் நறு நெய்தல்

மதுரைக் காஞ்சி *–247-250*

வள் இதழ் அவிழ் நீலம்
மேல் இலை அரி ஆம்பலொடு
வண்டு இறை கொண்ட கமழ்பூம் பொய்கை

மதுரைக் காஞ்சி *– 251-253*

இப்பாடலில் அறியப்படும் செய்திகள் என்னவென்றால் ஆறுகள் கிழக்குக் கடலை நோக்கிப் போகும் நீராகிய விரைந்து ஓடும் வெள்ளம், குளங்கள் கொள்ளுமாறு நிறைக்கும், யானையும் நின்றால் மறையுமாறு உயர்ந்து வளைந்த கதிர்களையுடைய வயல்களிலும், மடுக்களிலும் இலைக்கு மேல் உயர்ந்துள்ள தாமரைப்பூவையும் தேன்மணக்கும் நெய்தற் பூவையும், பெரிய இதழையுடைய நீலமலரையும், வண்டுகள் மொய்க்கும் மணம் மிக்க பூக்களையுடைய பொய்கைகளிலும் நீர் பாய்ந்தது.

முல்லை நிலம்

*சிறுதினை கொய்ய கவ்வை கறுப்ப*
*கருங் கால் வரகின் இருங் குரல் புலர*
*ஆழ்ந்த குழும்பில் திரு மணி கிளர*
*ஏழுந்த கடற்றில் நன் பொன் கொழிப்ப*
**மதுரைக் காஞ்சி** *– 271- 274*
*நீலத்து அன்ன பைம் பயிர் மிசைதொறும்*
*வெள்ளி அன்ன ஒள் வீ உதிர்ந்து*
**மதுரைக் காஞ்சி** *– 279 - 280*

*சிறிய தினைக்கதிர்கள் கொய்யப்படுகின்றன. எள் இளங்காய் முற்றிக் கரிய நிறம் கொள்கின்றன. கரிய தாளையுடைய வரகில் கரிய கதிர்கள் முற்றி ஈரம் உலர்கின்றன. ஆழமான குழியில் அழகுடைய மணிகள் கிடந்து மிளிர்கின்றன. வளர்ந்த காட்டில் பொன் மேலே புரளும்படி சிறிய தலையையுடைய நவ்விமான்கள்; பெண்மானுடன் சுழல்வனவாய்த் திரியவும், ஒளிமிக்க மலர்களையுடைய கொன்றை படர்ந்த நிழலில் பரப்பி; வைத்தாற்போன்ற பாறை அழகு பெற்று நீலமணியைப் போன்ற நிறம் கொண்ட பசுமையான பயிரின் மேல்; முசுண்டை கொடியும், முல்லையின் வெள்ளிய நிறத்தை ஒத்த பூக்கள் உதிர்ந்து பரவவும், நீலமணி என மயங்கும் நெய்தல் மாறுபடும்படி விருப்பந்தரும் தெளிந்த நீரையுடைய பள்ளத்தில் தொய்யிற் கொடியுடன் மலரவும், இவற்றால் இழைத்தல் வல்லவேல் மகன் இழைத்த வெறிக்கூத்தையுடைய களத்தை ஒத்ததாக முல்லை ஒழுக்கம் பொருந்திய முல்லைக்காடு சூழ்ந்த ஒரு பகுதியாகும்.*

*குறிஞ்சி நிலத்து ஓசைகள்*

*கருங் கால் வேங்கை இருஞ்சினைப் பொங்கர்*
*நனும் பூக் கொய்யும் பூசல் இருங் கேழ்*
*ஏறு அடு வயப் புலிப் பூசலொடு அனைத்தும்*
*இலங்கு வெள் அருவியொடு சிலம்பகத்து இரட்ட*
*கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பு அணிந்து*
**மதுரைக் காஞ்சி** *– 296 - 300*

*தினைவிளையும் மலைப்பக்கத்தில் படியும் கிளியை ஒட்டும் ஆரவாரமும், நீலமணி போன்ற மலரையுடைய அவரையினது தளிரைத் தின்கின்ற ஆமாவை ஓட்டும் கானவரின் ஆரவாரமும், மலையில் வாழும் குறவன் தோண்டப்பட்ட மூடினவாயை உடைய பொய்க்குழியில் விழுந்து*

பக்குவத்தை உடைய ஆண் பன்றியைக் கொல்வதால் எழும் ஆரவாரமும், கருமையான அடிப்பகுதியையுடைய வேங்கை மரத்தின் பெரிய கிளைகளில் உள்ள கொம்புகளில் மலர்ந்த நறுமணப்பூவைப் பறிக்கும் மகளிர் "புலி புலி" என்று கூறும் ஆரவாரமும், வெண்மையான அருவி முழக்கத்துடன் மலையில் எதிரொலிக்க செய்யும் உரிப்பொருள் புணர்ச்சி ஒழுக்கம் அமைந்த பக்க மலைகளையுடைய பெறுவதற்கு அமைந்த பெரிய மலைகள் பொருந்தி விளங்கும் ஒரு பக்கம், திணை முதிர்ந்ததால் அதனை கிளிகள் தின்ன வரும் அவற்றை ஓட்டுவர் குறமகளிர் அந்த ஒலி எழுகின்றது மலையின் ஒரு பக்கத்தில்.

படைகள்

ஒண் கதிர் ஞாயிற்று ஊறு அளவாத்திரிதரும்
செங்கால் அன்னத்துச் சேவல் அன்ன
குருஉ மயிர்ப் புரவி உராலின் பரிநிமிர்ந்து
மதுரைக் காஞ்சி – 385- 390

அழகிய கதிரவனாகிய கண்ணையுடைய பெரிய வானம் மறையும்படி காற்றைப் பிளந்த வண்ணம் அஞ்ஞாயிறு மண்டிலத்தை அடைய வேண்டும் என எண்ணி விரைந்து பறக்கும் சிவந்த காலையுடைய அன்னச்சேவலைப் போன்ற வெண்மையான மயிரையுடைய குதிரைகள் இழுத்துக்கொண்டு ஓடுதலால்; விரைந்தோடும் அழகுடைய தேர்கள்,

"நெடு மயிர் எகினத் தூ நிற ஏற்றை
குறுங்கால் அன்னமோடு உகளும் முன் கடை"
நெடுநல்வாடை 91-92.

குதிரையை ஓட்டுபவன் மத்திகை கொண்டு பயிற்றியபடி வட்டமான, இடத்தினும் ஆதி என்னும் செலவில் ஓடின பிடரியையுடையனவாக, இடுமயிரையும் உடைய குதிரைகள், யானை போன்ற அச்சம் உண்டானதற்க்குக் காரணமான போக்கையுடைய கள்ளினை அருந்தும் மறவர் மயக்கும் நான்கு வகைப்படை வருதலாலும் போதலாலும் உடையவனாய் இருந்தன.

தொண்முது பெணடீர்:-

இருங் கடல் வான் கோடு புரைய வாருற்றுப்
பெரும் பின்னிட்ட வால் நரைக் கூந்தலர்
நன்னர் நலத்தர் தொல்முது பெண்டிர்
செந் நீர்ப் பசும் பொன் புனைந்த பாவை
செல் சுடர்ப் பசு வெயில் தோனறியன்ன
மதுரைக்காஞ்சி 407-411

*கடுமையான கடலில் தோன்றும் வெண்மையான சங்கைப் போன்ற கூந்தலைக் கோதிப் பின்னிமுடித்து விட்ட பெரிய வெண்மையாய் நரைத்த கூந்தலையுடைய மூத்த பெண்டிர், சிவந்த நீர்மையுடைய கிளிச்சிறை என்னும் பொன்னால் செய்யப்பட்ட பாவை வெயிலிடத்தே தோன்றியதை போல் சிவந்;த நிறத்தையுடையவர், ஆடவருக்கு வருத்தத்தை உண்டாக்கும் பார்வை பொருந்திய கண்னை உடையவர். வியப்பை உண்டாக்கும் மாமை நிறம் உடையவர், கூர்மையான பற்களின் வரிசையால் நேர்மையான வாயையுடையவர், வளைவான சந்திரனையுடைய மூங்கிளைப் போன்ற தோளையும் நெகிழும் கைவந்த கலையையுடையவள்.*

*வெயிற் கதிர் மழுங்கிய படர் கூர் ஞாயிற்றுச்*
*செக்கர் அன்ன சிவந்து நுணங்கு உருவின்*
*மதுரைக்காஞ்சி 431-432*

*வெயிலின் கதிர் ஒளி மழுங்கிய ஞாயிற்றையுடைய சிவந்த வானம் போன்று சிவந்த நுண்ணிய வடிவால் கண்களை வெறியோடச் செய்து, சிந்தி விழும்படி செய்யுமாறு ஒள்ளிய பூந்தொழிலையுடைய ஆடைகளைப் பொன் இட்ட உடைவாளுடன் அழகுடன் கட்டித் திண்மையான தேர் தட்டில் பிரம்பிடத்தே ஆடையின் முன்தானை கிடந்து புரளஇ உலகில் உள்ளவர் வலிகளைக் கடந்து புகழ்ச்சியால் எங்கும் திரியும் வேப்ப மாலையையும், மாணிக்கம் ஒழுகியது போன்ற செங்கழுநீர் மாலையையும், அழுகுடைய மார்பில் விளங்கும் முத்துமாலையும், கலந்து அணிந்து காற்றைப்போல் விரையும் முகில் போன்ற வன்மையையுடைய வனப்பம் மிக்க செல்வந்தர் இருக்கையில் அமர்ந்து கண்ட வண்ணமாய் விளங்கினார்.*

*ஏறு தழுவுதற்குரிய காளைகள்*

*மனி வரை மருங்கின் அருவி போல*
*அணி வரம்பு அறுத்த வெண் காற் காரியும்*
……………………………………………………………………….
……………………………………………………………………….

*(கலித்தொகை: 10-11)*

*கலித்தொகையில் காளைகளப் பற்றி வர்ணிக்கும் போது பரண் மீது அமர்ந்த பின்பு, ஆயர் மணிகளையுடைய மலையினின்றும் வீழ்கின்ற அருவிகள் போன்று அழகினது எல்லையைத் தாண்டி வெண்மையான கால்கள் பொருந்திய காரியாகிய காளை மீன் பொலிவுடன் தோன்றும் அந்திக் காலத்து மேகம் உடைய சிவந்த வானம் போன்ற அழகிய ஒளியுடைய புள்ளிகள் வெள்ளையாய்*

***விளங்கும் சிவந்த காளை கொல்லும் தொழிலுடைய இறைவன் சூடிய இளம் பிறையைப் போன்று வளைந்த கொம்பையுடைய சிவந்த காளை, போரிடும் மாறுபாட்டையும் வலிமையும் உடைய பிற காளைகள் பலவற்றையும் தொழுவில் விடுதலால் புகை சூழ்ந்ததாய் விளங்கியது என்று கூறுகின்றன.***

***ஏறு தழுவும் வீரனின் நிலை***

**வெரு வரு தூமம் எடுப்ப, வெகுண்டு**
**திரிதரும் கொல் களிறும் போன்ம் -**

*(கலித்தொகை: 23-24)*

***பாடலின் பொருள் வெண்மையான காளையின் நடுவே பாய்ந்து கழுத்தில் தழுவிக் கிடந்தவனுடன் பரணின் மேல் தாவிப்பாயும் அத்தோற்றம் பாம்பின் வாயால் சிறிதிடம் விழுங்கப்பட்டு, அப்பாம்புடனே ஒளியைத் தரும் வானிலே செல்கின்ற பால்போன்ற மதியை போல் விளங்குகிறது என்று கூறுகின்றன.***

***முடிவுரை:***

***மதுரைக் காஞ்சியில் இடம்பெறும் பாடல் வரிகளில் குளங்களில் பூத்திருக்கும் மலர்களின் நிறங்களையும், முல்லை நிலத்தில் விளையக்கூடிய பயிர்களின் நிறங்களையும், சூரியனுடைய கதிர்களின் ஒளியையும், அன்னச்சேவலின் கால்களுடைய நிறங்களையும், முது பெண்களின் முடியினையும், அணிகலன்களையும் குறிப்பிடும்போதும் அரண்மனை சுவர்களில் தீட்டிய ஓவியங்களைப் பற்றி கூறும்போது உவமையாக பல நிறங்களை பயன்படுத்தியுள்ளனர்.***

***பார்வை நூல்கள்:***

***அ. மாணிக்கம். மதுரைக் காஞ்சி. சங்க இலக்கியங்கள் – பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி, தொகுதி 15, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 17.***

*அ. மாணிக்கம், (2015). சங்க இலக்கியங்கள் – முல்லைக்கலி. வர்தமானன் பதிப்பகம், சென்னை – 17.*